இருபதாம் நூற்றாண்டின் மனுநீதி சோழன்

சம்பிரீதி முத்து





மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுதுறை அமைச்சர்

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். அவர்களின்

பிறந்த நாள்

அன்பளிப்பு



மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுதுறை அமைச்சர்

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்களின்

57-வது பிறந்த நாளுக்கு அன்பளிப்பு

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



பிறப்பு
8-8-1949

பிறந்தநாள்
8-8-2006

பலர்புகள் ஞாயிறாய்
பாருக்கு உழைக்கும்
பைந்தமிழ் தேர்ப்பாகன்
கலைஞரின் போர்வாள்

அகவை 57-ல் அடியெடுத்துவைக்கும்
எங்கள் **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்**
பல்லாண்டு வாழ்க!



அகவை 57-ல் அடியெடுத்துவைக்கும்

விருதையின் வெற்றி திலகம்

முத்தமிழறிஞரின் நம்பிக்கை நட்சத்திரம்

2775

கழக தொண்டர்களின் காவல் தெய்வம்

வசீஸ்டர் வாயால் பிரமரிசி பட்டம்பெற்ற

B 923.254109 சம்

விஸ்வாமித்திரர் போல்

தமிழினத் தலைவர் வாயால்

சாதனையாளர் சாத்தூரார் என்று புகழ்பெற்ற

அண்ணன் **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.**

பல்லாண்டு சிறப்புடன் வாழ வணங்கி

வாழ்த்தும் அன்புத் தம்பி

N.P.சிவராஜ் M.A.,
ஒன்றிய செயலாளர்
ஊராட்சி மன்ற தலைவர்
வத்திராயிருப்பு.



கன்னித் தமிழ் காவலர்

கலைஞரின் சுழலும் போர் வாள்

விருதையின் வெற்றி திலகம்

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்களின்

57-வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



அன்புடன்:

P.குருசாமி (எ) செல்லத்துரை

தங்கம் STD பூத்

அம்மன் சன்னதி, கூமாப்பட்டி - 626 133.

வத்திராயிருப்பு ஒன்றியம்

பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம் சென்னை-18 அண்ணா அறிவாலயம்

சிகரங்களை நோக்கிய சிந்தனை

-தெ.சுந்தரமகாலிங்கம்

வயது பட்டை தீட்டுகிறது வளமான சிந்தனைக்கு. நடையே ஓட்டமாகக் கொண்ட எழுபதைத் தாண்டிய இளைஞர் அவர். முத்தமிழ், முப்பால்,முக்கனி என்னும் வரிசையில் அன்பு, அறிவு, அடக்கம் என்னும் முப்பண்புகளுக்கும் வாழும் இலக்கியமாகத் திகழ்பவர்.

கொண்டல் தவழும் கொண்டைகளென்னும் சிகரங்கள் பச்சை மணிமுடி தரித்து நிற்கும் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரம். காமராசர் காலத்தில் கருவாகிக் கலைஞர் மடியில் தவழ்ந்த பெரியாறு, கோவிலாறு என்னும் இரட்டை நீர்த் தேக்கங்களின் இருப்பிடம். பொங்கு தமிழ்ச்சங்க இலக்கியங்கள் அடையாளம் காட்டிய தாவரங்கள், விலங்கினங்கள், பறவையினங்கள் பல்கிப் பெருகிப் பரவசமூட்டும் வனச் செல்வம் குறைவின்றிப் பெற்ற மண்.

அற்றை நாளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியரும் நாவலரும் மாணவப் பருவத்தினராய்த் தமிழ் பருக ஏங்கி நின்ற வேளை தாகம் தீர்க்கும் தமிழ் அருவியாய் விளங்கிய புலவர் கந்தசாமியார் உதித்த பூமி. கூமாப்பட்டி என்னும் காரணப் பெயருடன் விளங்கும் சிற்றூரின் புகழ் சிறக்கத் தமிழ் வளர்க்கும் மூத்த தமிழறிஞர் சம்பிரிதி முத்து அவர்களைப் பாரறிய அறிமுகமாய்க் கூறுபவையே தொடக்க வரிகளாய் நாம் கண்டவை.

அலைச்சல் என்பது தமிழுக்காக; உழைப்பு என்பது இயக்கத்துக்காக; உணர்வு என்பது தலைவருக்காக; உற்சாகம் என்பது இளைஞரேறு ஸ்டாலினுக்காக; இத்துணை அற்புதமான கலவையாக மின்னுபவரே சம்பிரிதி முத்து!

இலக்கிய ஆர்வலர் என்பது பொதுவான செய்தி; இலக்கியம் படைப்பவர் என்பது சிறப்புச் செய்தி. எழுதுகோல் பற்ற நேரமின்றி இவர் இருப்பதால் இழப்பு நமக்கும் தமிழுக்கும். கற்ற தமிழின் செழுமையை எழுத்து நடையில் காட்டும் ஆற்றல் நிறைந்தவர். சங்க இலக்கியம் பயின்றதன் பயனைத் தெளிவாய்க் காட்டும் சான்றுகளுக்கு இவரிடத்துப் பஞ்சமில்லை.

குறைவான பக்கங்களுடன் நிறைவான கருத்துப் பெட்டகங்களை வடிவமைத்து வழங்குவதில் வல்லவர். "**குறளோவியம்**" படைத்த தமிழ்க் கோமகனின் சிறப்பைக் கூறுவதில் சாதனை புரிந்தவர். கலைஞரைச் சைவ நெறியுடன் இணைத்துக் காண்பதில் பேருவகை கொள்பவர்.

குடியாட்சித் தத்துவத்தைக் குப்பைக் கூடையில் வீசியெறிந்துவிட்டு அடக்குமுறையைக் கையிலெடுக்க நெருக்கடி நிலையை இந்திரா அம்மையார் அறிவித்த நேரம்; சுதந்திரப் போராட்டத்தின் வீரத் தழும்புகள் ஏந்தியோரையும் இரக்கம் சிறிதுமின்றிச் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்த வேளை; திராவிட இயக்கத்தின் இடைநிலை நண்பர்களைச் சொல்லொணாக் கொடுமைகளுக்கு இரையாக்கிய இந்திராவின் வெறி உச்சத்தில் நின்றபொழுது; கலைஞரின் பேனாவிலிருந்து கிளம்பிய ஒவ்வோர் சொல்லுக்கும் ஓராயிரம் பொருள் கூறலாம். பத்திரிகைத் தணிக்கை பூதக் கண்ணாடி கொண்டு சோதனை செய்து ஏராளமான கட்டுப்பாடுகளை விதித்தது. "**முரசொலி**" யில் கலைஞர் எழுதுவதைத் தொண்டர்கள் புரிந்து கொண்டனர்; தணிக்கை அதிகாரிகள் திகைத்தனர்.

சென்னைச் சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட முன்னாள் மேயர் சிட்டிபாபுவின் மரணச் செய்தியில் தணிக்கை கை வைக்க முடியாதபடி சொற்களைத் தொகுக்கும் கைவண்ணம் கலைஞரின் ஆற்றலாக வெளியானது. தொண்டர்களுக்குச் செய்தி சுமந்து வந்த சோகம் எள்ளளவும் குறையாது நெஞ்சைத் தொட்டது.

கைதுசெய்யப்பட்ட கழக கண்மணிகளின் பெயர் பட்டியலை வெளியிட அரசு அனுமதி மறுத்தது; அயரவில்லை கலைஞர்; அண்ணா நினைவு நாளன்று "**அண்ணா துயிலும் இடத்திற்கு வர இயலாதோர்**" என்னும் தலைப்பில் பெயர்ப் பட்டியலை வெளியிட்டார்! தணிக்கைக் குழுவின் கத்திரிக் கோல் மழுங்கிய முனையுடன் இருந்ததெனில் தணிக்கைக் குழுவினர் மழுங்கிய மூளையுடன் திகழ்ந்தனர்!

ஆணவத்தின் உச்சியில் நின்று அக்கிரமங்களை அரங்கேற்றிய இந்திரா காந்தியின்அதிகார வெறிக்குப் பலியாகாமல், தொண்டர்கள் துவண்டுவிடாமல் கழகத்தைக் கட்டிக் காத்த கலைஞரின் பேனாவும் நாவும் என்றும் போற்றுதற்குரியன.

பொதுக் கூட்டத்திற்கு அனுமதி கிடையாது; அரங்கக் கூட்டமே நிகழலாம்.

திருச்சி மக்கள் மன்றத்திலும், மதுரை தமுக்கம் கலையரங்கிலும் நிகழ்ந்த கூட்டங்களில் கலைஞர் உரையாற்றினார். அரங்கைச் சூழ்ந்த திறந்த வெளியெங்கும் தொண்டர் திருக்கூட்டம். ஆட்சியை இழந்தாலும் கொள்கையைப் பற்றி நின்ற வீரமும் வேகமும் தொண்டர்களை உற்சாகப்படுத்தின. எது நேரிடினும் கலங்காத உள்ளம் கொண்டவர்களாக்கின.

சம்பிரிதி முத்து போன்ற மூத்த தொண்டர்கள் அண்ணாவின் நாவன்மையை நெஞ்சில் பதித்தோர் ஆவர்.

வத்திராயிருப்பு அண்ணா சீரணிக் கலையரங்க மேடையில் நின்று உணர்ச்சிப் பெருக்குடன் உரையாற்றிய இவர் "***மூள்க, மூள்கவே!***" என்ற பட்டினத்தாரின் வாசகத்துடன் அராஜக ஆணை தாங்கிய தாளுக்குத் தீ மூட்டிய காட்சி இன்னும் பசுமையாய் நிற்கிறது. கைதுசெய்யப்பட்ட வேளையில் கம்பீரமாய் முன்னணி வீரராய்ச் சென்ற துணிவும் மனத்திட்பமும் என்றும் கொண்டாடத் தக்கன.

அழகு தமிழுக்கு மகுடம் சூட்டி அகம் மகிழும் ஆன்றோர் வரிசையில் பெருமை பொங்கக் காட்சியளிப்பவர் சம்பிரிதி முத்து.

பிறர் மனம் நோகாவண்ணம் பொறுமை காத்துத் தேர்ந்தெடுத்த சொற்களால் நட்புக்கு அரண் அமைப்பவர்; பண்பாளர் பழனிவேல் ராஜன் போன்ற உயர்ந்த மனிதர்களின் தொடர்பால் இயக்கத்திற்கு வலுவூட்டும் ஏற்றமிகு தொண்டர்.

நெருக்கடி நிலையின்போது இளைஞர் ஸ்டாலின் கைதான நிகழ்ச்சி அழிக்க முடியாத வரலாறு. சிறைச்சாலை வாயிலில் மகனைச் சந்திப்பதற்காக நெடுநேரம் காத்து நின்ற கலைஞர் நெஞ்சில் இழையோடிய புத்திர சோகத்தை முன்னாள் முதல்வராக இருந்தும் மனிதப் பண்புகளற்ற பதர்களால் அவருக்கு இழைக்கப்பட்ட அவமானத்தை நேர்மை உள்ளம் கொண்டவர்கள் இன்றும் நினைத்துப்பார்க்கவே பதறுவார்கள்.

தியாகத்தை மதிக்கும் நெஞ்சினரான சம்பிரிதி முத்து தம் கடமையெனக் கருதி வெளியிடும் சிறு நூல்கள் ஆய்வுக்குரியன. மாற்றுக்கருத்துக் கொண்டோரும் மதித்துப்போற்றும் வைர வரிகளைக் கொண்டவை. குடும்பச் சூழலால் குடத்திலிட்ட விளக்கான குணாளரைக் குன்றின் உச்சியிலேற்றி உலகுக்கு ஒளியூட்டி வழிகாட்டச் செய்ய வேண்டியது கழக உடன்பிறப்புக்களின் தலையாய கடமையாகும்.



சம்பிரீதி முத்து கழகத்தின் சொத்து

இலக்கியக் கடலில் மூழ்கி முத்தெடுக்கும் ஒப்பற்ற முத்து.

வாழ்க பல்லாண்டு! வளர்க அவர்தம் தொண்டு!



தென்னகத்தின் போர் வாள்

சம்பிரிதி முத்து

வார்த்தெடுத்த போர்வாளாம் ஸ்டாலின் பின்னே
ஓரியக்கம் எழுந்தது காண் - வேங்கைக் கூட்டம்
ஓய்விதில்லை இனமானம் காத்து நிற்க
இளந்தமிழே எழுக, எழுக
இலங்கும் சுடரே வெல்க, வெல்க!
வளமைப் பொலிவே எழுக, எழுக!
வனப்பின் புகழே வெல்க, வெல்க!
களம்புகு புலியே எழுக, எழுக!
கதிரொளிஞாயிறே வெல்க - வெல்க!
தமிழனத்தளபதி எழுக - எழுக!
தளபதி ஸ்டாலின் வெல்க வெல்க!
தலைநகர் தந்தையே வாழ்க - வாழ்க!
தயாளுவின் மைந்தனே வெல்க வெல்க!
உள்ளாட்சி அமைச்சரே வாழ்க! வாழ்க!
உத்தமச்சோழனே வெல்க! வெல்க!

சம்பிரிதி முத்து
தி.மு.க. இலக்கிய அணி
திருவில்லிப்புத்தூர் தொகுதி,
கூமாப்பட்டி.

தலைமகனின் பிள்ளை!

மூன்றெழுத்து இயக்கத்து
மூச்சிருக்கும் காலம்வரை
சான்றுசொல்லும் தலைவன் பிள்ளை - புது
தத்துவங்கள் தாங்கிநிற்கும் முல்லை!

ஈரோட்டு வானத்து
எழிற்காஞ்சி கதிரவனோ
சீராட்டி வளர்த்ததொரு நிலவு! - நிலவின்
சீர்தானே தமிழறிஞர் கனவு!
தமிழோடு இனமானம்
தன்னுரிமை வரலாறு
இமையாகக் காத்தவனின் கொடியில்! பூத்து
எழுந்தமலர்! தமிழிளைஞர் வழியால்!

நெருக்கடிகள் சிறைக்கொடுமை
நெருஞ்சிவழி எத்தனையோ!
பொறுமையுடன் கடந்துவந்த கலைஞர்! என்றும்
புதுமைவழி தமிழனைஞர் தலைவன்!

முத்தமிழை இசைக்குமொரு
புத்தெழுசசி தலைவனவன்!
அத்தனைக்கும் ஓர்வடிவம் தந்தான்! - கழகம்
ஆர்த்தெழுமோர் இளைஞரணிக் கீந்தாய்!

காலமொரு தலைமைதரும்
காட்சியெல்லாம் எழுச்சிதரும்
கோலமிடும் அவன்பெயர்தான் ஸ்டாலின்! கொள்கை
குறள்போல வாழ்ந்திருப்பான் நூலில்!

மன்னன்மகன் தேரேற்றி
மாண்டதுவே என்கன்று
என்றுபசு உரைத்ததுயர் கேட்டான் மன்னன்
தன்மகனை தேரேற்றிப் போட்டாண்டான்!

அம்மன்னன் போன்று இன்று
தன்மகனைச் சிறைக்கனுப்பி
நீதிநெறி காத்த தமிழ்த் தலைவனின் கொள்கை
நிறைகளத்தில் தோன்றியஎம் இளையவன்!

- திருவில்லிப்புத்தூர் கவிதாதாசன்

சம்பிரிதி முத்துவின்

இருபதாம் நூற்றாண்டின் மனுநீதிச் சோழன்

தொண்டு செய்ய முற்படுபவன் அவன் தொண்டை ஏற்கும் உயிர்களுள் மாடு என்றும் மனிதன் என்றும் மன்னன் என்றும் குடிமகன் என்றும் எத்தகைய வேறுபாட்டையும் கண்டல் தகாது. (அ.ச.ஞான சம்பந்தன், பெரிய புராண ஆராய்ச்சி)

சென்னைக்குப் பலமுறை சென்றபோதும் உயர்நீதிமன்றத்தை சுற்றுப் பார்த்தது இல்லை.

19-12-97 நமது இனமானப் பேராசிரியர் பவழ விழாவிற்குச் சென்றவன் உயர்நீதி மன்றத்தைச் சுற்றிப் பார்க்கின்ற வாய்ப்பைப் பெற்றேன். என்னுடன் என் அருமைத் தங்கையின் கணவரும் பொது நூலகத்துறை சம்மேளனத்தின் கௌரவத் தலைவருமான மாரியப்பனும் வந்து இருந்தார். ஒவ்வொரு பகுதியாக என்னை அழைத்துச் சென்று அறிமுகம் செய்தார். அவ்வாறே ஒரு இடத்தைக்காட்டி இதுதான் மனுநீதிச் சோழனுடைய சிலை என்று காட்டினார். மெய் சிலிர்த்து நின்றேன். சோறுடைத்த சோழநாடும் அங்கிருந்து பாராண்ட மன்னர்களும் என் மனத்திரையில் நிழல் ஆடினார்கள்.

கங்கை கொண்டான்
கடாரம் வென்றான்
கலிங்கத்துப் பரணி கொண்டான்.

கனக விஜயர் தலையிலே கல்லேற்றி கண்ணகிக்குச் சிலை வடித்தான் என்றெல்லாம் சோழ நாட்டின் பெருமை பேசப்படும். அது மட்டுமா கடல் சூழ்ந்த வையகமெல்லாம் வாணிகம் நடத்தி பெருமை பெற்ற பூம்புகார் துறைமுகம் கண்ட நாடல்லவா?

பூம்புகார் என்றால் சாமானியமா! உலகத்து வணிகர்கள் எல்லாம் ஒரு சேரக் கூடியதல்லவா!!

நாளங்காடி, சிற்றங்காடி, பேரங்காடி என்று எத்தனையோ வணிக வளாகங்களைப் பெற்ற நாடல்லவா! இங்குதானே ஏசாச் சிறப்பும் இசை வழங்கு பெருங்குடியும் கொண்ட கொற்றவன் பெருமையைக் கூறியவுடன் கோப்பெரும் தேவி குலை நடுங்கியதும் தவறான தீர்ப்பு வழங்கிய கொற்றவன் பாண்டியன். உதட்டிலே மாணிக்கபரல்கள் தெறித்துவிழ யானோ அரசன் யானே கள்வன் என்று மணிமுடி துறந்து உயிர்விட்ட பாண்டியனுக்கு நீதியை உணர்த்திய நாடல்லவா சோழ நாடு!

புராண காலத்தில் இருந்து இன்றுவரை எத்தனையோ நீதிமன்றங்களையும், நீதிமுறைகளையும் உலகத்துக்கு வழங்கிப் பெயர் பெற்றது அல்லவா சோழ நாடு.

அந்த நாட்டின் பெருமையையும் அந்த நாட்டின் நீதி வழங்கிய மன்னர்களையும் காவியத் தலைவி கண்ணகி வாயிலாகக் கேட்போம்.

வாயிற் கடை மணி நட நா நடுங்க
ஆவின் கடை மணி உகுநா நெஞ்சு சுட
தான் தன் அரும் பெறல் புதல்வனை ஆளியில்
மடித்தோன் பெரும் பெயர் புகார் என்பதியே (அரண்ம)

அரண்மனை வாசலில் ஆராய்ச்சி மணி கட்டி கன்றை இழந்த தாய்ப்பசுவுக்கு நீதி வழங்கி குன்றின்மேல் இட்ட விளக்காக விளங்கிய மாமன்னர் யார் தெரியுமா? அவன்தான் மனுநீதிச் சோழன். இந்த மன்னனின் சிலையைத்தான் சென்னை உயர்நீதி மன்றத்தில் கண்டு நான் மெய்சிலிர்த்தேன்.

கலைஞரும் சோழ நாடும்

இந்த மாமன்னனை நினைவுகூறும் முகத்தான் தமிழினத் தலைவர் கலைஞர் தம் ஆளுகையின்போது கடை கோடி மகனுக்கும் நீதி சென்றடைய வேண்டும் என்ற தாக்கத்தில் மனுநீதி நாளை அறிவித்தார்.

பெற்ற தாயும் பிறந்த
பொன்னாடும் நாற்றவ
வானில் நனி சிறந்ததுவே

இப்படி வழிவழியாக சோழ நாட்டின் பெருமை நிலை நிறுத்தப்படுகின்றது புதிய பூம்புகார் கண்டு வீண்புகழ் வென்றவர் அல்லவா கலைஞர்!

திருவாரூர் பிறப்பெல்லாம் சிவமயம் என்றும் திருவாரூர் பிறந்தவர்கள் எல்லோருக்கும் அடியேன் என்று சைவம் பேசும்.

இன்றைக்கும் கொண்ட கொள்கைக்காக வகுத்துள்ள சட்டதிட்டங்களுக்காக என்ன விலை கொடுத்தேனும் காப்பாற்றி தொண்டர்கள் வணங்கும் தெய்வமாகவுள்ளவர் அல்லவா கலைஞர்.

இப்படி புராணச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட திருவாரூர்தான் மனுவேந்தன் தலைநகர். நீதியை நிலைநாட்டவும் நீதி வழி செல்லவும் அந்நாட்டு மன்னர்களும் மக்களும் எத்தனை தாகமாக இருந்தார்கள் என்பதைத்தான் பாண்டிய மன்னனின் அவையில் கண்ணகியின் சீற்றம் ஒலித்தது. மன்னனும் தவறை உணர்ந்து உயிர் துறந்தான்.

அந்த கற்பரசி கண்ணகி இன்று இருந்து இருப்பாளானால் நீதிபதி ஜெயின் போன்ற புல்லர்களை காரி உமிழ்ந்து இருப்பாள். இந்த கற்பரசியை காலம் காலமாக தமிழகம் போற்ற வேண்டும் என்பதற்காகத்தான் வரலாற்று நாயகர் கலைஞர் சென்னைக் கடற்கரையில் நீதிதேவதையாக கையில் தனிசிறப்புடன் கண்ணகிக்கு சிலை அமைத்துள்ளார்.

சோழநாட்டுப் பெருமைக்கு மற்றுமொரு மகுடம் தன்னுடைய இளமைத்தோற்றம். நீதிகோரி வருபவர்களுக்கு இந்தச் சிறுவனா நமக்கு நீதி வழங்குவது என்ற அச்சம் வரக்கூடாது என்று முதுமை வேடமிட்டு நீதி வழங்கிய கரிகால் பெரு வளத்தானையும்.

தன் நிழல் தரையில் படாத தஞ்சைப்பெரு உடையார் கோவிலைக் கட்டிய இராஜராஜ சோழனையும் நாடு மறக்காது. இம்மண்ணை நினைவு கூறும் வண்ணம் தஞ்சைப் பெருவுடையார் கோவிலின் முன் முகப்பில் அம்மன்னனுக்குச் சிலை வடித்துப் பெருமை சேர்த்தார் கலைஞர்.

இப்படி ஆண்டவனாலும் ஆண்டவர்களாலும் நீதிநெறியாலும் நிலைகுலையாமல் நிற்கும் சோழ நாட்டின் வரலாற்றுப் பெருமையை ஆட்சியில் இருந்தாலும், ஆட்சியில் இல்லாவிட்டாலும் காத்த பெருமை கலைஞரைச் சேரும்.

மனுநீதிச் சோழனுடைய வரலாறு புராணந்தானே என்று கலைஞர் ஒதுக்கிவிடவில்லை. அதில் உள்ள நீதியை நிலைநிறுத்த நாளெல்லாம் போராடி வருபவர் கலைஞர்.

கட்சியை விட்டு வெறியேற்றப்பட்ட எம்.ஜி.ஆர். காழ்ப்புணர்ச்சி காரணமாக கழக அரசின்மீதும் கலைஞர் மீதும் 6-11-1972-ல் கவர்னரிடம் புகார்ப்பட்டியல் கொடுத்தார்.

25-6-1975-ல் இந்திரா காந்தியால் நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. மக்களாட்சியின் குரல்வளை நெறிக்கப்பட்டு மக்கள் நடைபிணமாக்கப்பட்டனர். அடிப்படை ஜனநாயக உரிமைகள் இந்திராவால் பறிக்கப்பட்டது. பத்திரிகைகளில் தணிக்கை முறை அமுலானது. நாட்டின் மிகப்பெரிய தலைவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். லோக் நாயக் என்று புகழப்பட்ட ஜெயபிரகாஷ் நாராயணன் உட்பட இமயம் முதல் குமரிவரை பெரும் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

மத்திய அரசு பேரரசு போலவும் மாநில அரசு சிற்றரசு போலவும் மத்தியஅரசுக்குக் கைகட்டி வாய் பொத்தி இருக்க வேண்டும் என்பதுபோலவும் அல்லது அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவைப் பயன்படுத்தி மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட மாநில அரசுகளை குரங்கு கைப்பூமாலைபோல் ஆட்டி வைப்பதுமான மாற்றாந்தாய் மனப்பான்மை வேரூன்றியிருந்த நேரம். இந்திரா காந்தியின் அவசர நிலை பிரகடனத்தை தனது ஆட்சி போனாலும்

பரவாயில்லை என்று பொதுக்குழுவைக் கூட்டி தீர்மானம் போட்டவர் தலைவர் கலைஞர் நவீன ஹிட்லர் என்று படம் போட்டு முரசொலி கண்டனம் வெளியிட்டது. நமது நாடாளுமன்ற உறுப்பினர் மாறன் மிசாவில் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் 31-01-1996-ல் மக்கள் நல அரசு ஊனமுற்றோர், விழி இழந்தோர், இழுவண்டி இழுப்போர், கைம்பெண்கள் ஆகியோருக்கு கலங்கரை விளக்காக இருந்த மு.க.அரசு அடாவடித்தனமாக இந்திராவால் கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்டது மட்டுமல்ல. தமிழகத்திலும் கைது நடவடிக்கை தொடர்ந்தது. ஐந்நூறுக்கு மேற்பட்ட கழகக் கண்மணிகள் கைது செய்யப்பட்டனர். அதில் இளைஞர் படைத் தளபதி ஸ்டாலினும் ஒருவர்.

இந்த நிலையில் 03-02-1976-ல் சர்க்காரியா கமிஷன் டெல்லி அரசு அறிவித்தது. தமிழகத்தில் ஏராளமான குள்ள நரிகள் ஓலமிட்டன. தமிழகம் கொடியவர்களின் கூடாரமானது. குப்பை மேடேரி கோழி பிடிக்கத் தெரியாததுகள் எல்லாம் பொறாமையால் கொக்கரிக்கத்தன.

நமது இறைவன் கல்லால் அடித்தவனையும் காலால் மிதித்தவனையும் துயர் துடைக்கப் பிட்டுக்கு மண் சுமந்தபோது பிரம்பால் அடித்தவனையும் மன்னித்து ஏற்றுக்கொண்டது போல் கலைஞர் அத்தனை கொடுமைகளையும் தாங்கிக்கொண்டார்.

உமையவள் போல் வாழ்க்கைத்துணை நலம் பேணிய அன்னை தயாளுகூட அவமானப்படுத்தப்பட்டார். ஏன் கோபாலபுரம் இல்லமே யானை புகுந்த வெங்கலக்கடையாக சோதனை போடப்பட்டது.

நீதியின்மேல் பசித்தாகம்
உடையவர்கள் பாக்கியவான்கள்
பொல்லாதவர்களை குறித்து எரிச்சல்
அடையாதீர்கள் அவர்கள்
புல்லைப்போல் அறுப்புண்டு
போவார்கள்

என்ற வேதம் உணர்ந்தவன் தமிழகத்தை முறையாக ஆட்சி புரிந்து இறை என்று போற்றப்பட்ட புத்தன் கலைஞர் மிக அமைதியாகக் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டார்.

ஊர் உறங்கும் போதினிலும்
உள்ளம் உறங்காதான்
யார் மயங்கும் போதினிலும்
தான் மயங்கல் இல்லான்
சீர் விளங்கும் வீரர்
பேர் விளங்க வந்தான்
வீரன் கருணாநிதி எவ்வூரிலும் எழுந்தான்

ஆம் கல்லக்குடிப் போராட்டத்தில் முதல் வீரனாக அண்ணாவால் அறிவிக்கப்பட்ட களங்கண்ட புலி-கலைஞர் ஒரு சிறிதும் மனம் கலங்கவேயில்லை. அல்லும் பகலும் அயராமல் உழைத்து தமிழகத்தை தன் முரசொலி கடிதத்தால் தட்டி எழுப்பினார். ஆம், தமிழகம் வீறுகொண்டு எழுந்தது. குவலையமே என் காலடியில் என்று கொக்கரித்த இந்திரா காந்தியை சென்னைக் கடற்கரையில் மன்னிப்புக் கேட்க வைத்து மீண்டும் அவரைப் பதவியில் அமர்த்தினார்.

குறளோவியம் கண்ட கோமான் தனக்குத் துன்பம் செய்தார்க்கும் நன்மை செய்த மற்றோர் திருவாரூர் பிறப்பல்லவா!

போரிலே வெற்றி காண முடியாமல் புறமுதுகிட்டு ஓடி - பின் சிவ வேடமிட்டு வந்தது மன்னன் அயர்ந்து இருக்கும் சமயம் கொலை செய்து முத்தநாதனை மன்னித்த மெய்பொருள் மன்னர் போல், முதுகிலே குத்திய இந்திராகாந்தியை மன்னித்தார். மீண்டும் டெல்லி அரசவைக்கு அனுப்பி வைத்தார்.

இதோ பெரிய புராணம் பேசுவதைக் கேட்போம்.

மாநிலம் காப்பவன் மன்னுயிர் காக்குங்காலை தன்னால் தன் பரிவாரத்தால் பகைவரால் கள்வரால் ஏனைய உயிர்களால் குடி மக்களுக்கு இடையூறு வருங்கால் அந்த ஐவகை அச்சங்களையும் தீர்த்து அறம் பிறளாது காப்பவன் அல்லவோ அரசன்.

இதைத்தான் சேக்கிழார் மனுநீதிச் சோழன் மூலமாக நமக்கு காட்டுகின்றார். மனுநீதிச் சோழன் வரலாறு நாடறிந்த ஒன்று. அவன் திருவாரூர் சீமைக்கு அரசன். அவ்வூரில் அருளாட்சி புரியும் இறைவரோ வீதிவிடங்கர். அரசர் மனுவின் குலம் தழைக்க வந்த ஒரே மைந்தன் அவன் பெயரும் வீதிவிடங்கன். அரச குமாரனுக்கு கேட்பானே. சகல பரிவாரங்களும் அவன் விரும்பியபடி சுழலும்.

ஒருநாள் வீதிவிடங்கன் திருவாரூர் தேரோடும் வீதியிலே தேரேறி வீதி வலம் வந்தான். அந்தோ பரிதாபம்! தாயைப் பிரிந்த பசுங்கன்று மன்னன் மகன் ஓட்டி வந்த தேர்க்காலிலே அடிபட்டு உயிர் இழந்தது. உயிர் பலிகண்டு வீதிவிடங்கன் துடிதுடித்தான். இதை அறிந்த தாய்ப்பசுவோ மனுவேந்தன் அரண்மனை நோக்கி கதறிக்கொண்டு விரைந்து அரண்மனை வாயிலில் இருந்த ஆராய்ச்சி மணியை தன் வாயினால் கவ்வி ஒலி செய்தது.

மணியோசை கேட்ட மன்னன் துடிதுடித்துப்போனான். அமைச்சர்களை அழைத்து ஆலோசனை நடத்தினான். அத்தனை பேரும் இளவரசன் மேல் குற்றமில்லை என்று வாதிட்டனர். பசுங்கன்று இறந்ததற்கு மிருக சாஸ்திரத்தில் என்ன பரிகாரம் சொல்லப்பட்டுள்ளதோ அதைச் செய்தால் போதும் என்று சொன்னார்கள்.

ஆனால் நீதியின்மேல் பசித்தாகம் உள்ள மன்னன் ஒரு புறாவுக்காகத் தன் முன்னோர்கள் சிபி சக்கரவர்த்தியின் தியாகத்தை நினைத்தான். எந்த நாட்டின்.

எந்த நாட்டின் ஒரு பசு நீதி கோரி ஆராய்ச்சி மணியை ஒலித்தது. நீதி சாகாவரம் பெற்றது. தம் முன்னோர்கள் வழி நின்று அதைக் காப்பாற்றுவதே கடமை என உணர்ந்தான். அமைச்சரை அழைத்து தன் மகன் வீதிவிடங்கன் எந்த வீதியிலே தேரேறி பசுங்கன்று சாகக் காரணமாக இருந்தானோ அதே வீதியில் அவனைத் கிடத்தி தேரேற்றிக் கொல்ல ஆணை இடுகின்றான்.

அமைச்சனோ மன்னனுடைய ஆணையை நிறைவேற்ற முடியாமல் உயிரை விடுகின்றான். பின் மன்னனே தாய்ப்பசுவுக்கு நீதி வழங்க தனது தீர்ப்புக்கு பங்கம் வந்துவிடக்கூடாது என்று தானே அதையும் நிறைவேற்றத் துணிந்து விட்டான் இதோ பெரிய புராணம் முழங்குவதைக் கேட்போம்.

ஒரு மைந்தன் தன் குலத்துக்(கு) உள்ளான் என்பதும்
உணரான் தருமம் தன் வழி செல்கைக் கடன் என்று
தன் மைந்தன் மருமம் தன் தேராழி உர ஊர்ந்தன் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோதான் (சேக்கிழார்)

ஆம் மன்னன் நீதியை நிலை நிறுத்திவிட்டான் அவனுக்கு ஏற்பட்ட சோதனையில் வென்று விட்டான். இதே சோதனை தமிழனத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞருக்கும் ஏற்பட்டதைத்தான் நாம் இதுவரை மேலோட்டமாகப் பார்த்தோம்.

இந்திராவின் அவசர நிலை அமுலில் இருந்தபோது அரசின் காவலர்கள் முன்னாள் முதல்வர் என்றுகூடப் பார்க்காமல் கலைஞர் வீட்டுக் கதவைத் தட்டுகின்றார்கள். கதவு திறக்கப்படுகின்றது. கலைஞரே நிற்கின்றார்.

காவலர்களின் முதல் கேள்வி ஸ்டாலின் இருக்கின்றாரா என்பதுதான்.

கலைஞர் இல்லை வெளியூர் சென்று இருக்கிறார். முன்னாள் முதல்வரை காவலர்கள் சந்தேகத்துடன் நோக்குகின்றார்கள்.

வெளியூர் சென்ற ஸ்டாலின் எப்போது வருவார் - காவலர் கேள்வி. வந்தவுடன் தகவல் அனுப்புகின்றேன் - கலைஞர் பதில். வெளியூர் சென்ற ஸ்டாலின் இரவு வந்துவிட்டார். விடிந்தவுடன் காவலர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றப் போகின்றோம் என்று நிம்மதியாகத் தூங்குகின்றார் கலைஞர்.

ஆம். உதித்து விட்டான் செங்கதிரோன் தென் திசையில் தென்னகத்தில் கொதித்தொழுவோம் கொத்தடிமை தீர்வதற்கு என்று தமிழகம் விழித்தெழுந்தது கோபாலபுரம் அஞ்சுக இல்லத்திலும் எம்பெருமான் கலைஞருமே கண்விழித்தார்.

அஞ்சுக இல்லமே பரபரப்படைந்தது. தொலைபேசி ஒலிக்கின்றது. கலைஞர் பேசுகின்றார். போலீஸ் கமிஷனர் அலுவலகமும் பரபரப்பு அடைகின்றது. இரவு ஸ்டாலின் வந்துவிட்டார்-கலைஞரின் குரல், உடனே புறப்பட்டு வர அழைப்பு.

நீதி நெறியில் நின்று
பிறர்க்குதவும் நேர்மையார்
மேலாவார் கீழாவார் மற்றோர்

என்ற நெறியுணர்ந்த கலைஞர் இல்லம் நோக்கி சென்னை நகரக் காவல்படை புறப்படுகின்றது.

வீரத்தாய் தயாளுவோ கொற்றவன் கலைஞர் வழியில் அரசியலில் பீடு நடைபோடும் தன் அருமை மகனை உச்சி மோந்து வழி அனுப்பத் தயாரானார்.

ஸ்டாலின் என்னும் குன்றத்தில் துவண்ட கொடி முல்லை எழில் மனைவி நிறைமாத கர்ப்பிணி துர்க்காவோ ஆளாளைப் பிரிய மனம் இல்லாமல் துவண்டார்.

ஆல் ஒடிந்து வீழ்ந்தாலும் தோள்கள் தாங்கும் அரிமாவைப் பெற்ற அன்னை தயாளுவோ நிறைமாத கர்ப்பிணியான மருமகளைத் தன் தோள்களில் அனைத்துக் கொள்ளுகின்றார்.

காவலர் கைது செய்ய வந்துள்ள செய்தி ஸ்டாலினுக்குத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் செய்தியை எதிர்பார்த்தே இருந்திருக்கின்றார்.

மானமொன்றே நல்
வாழ்வெனக் கொண்டு
வாழ்ந்த எம்! மறவேந்தர்
பூனைகள் அல்லார் அவர் வழி
வந்தோர் புவிநிகர் தமிழ்மாந்தர்

என சிலிர்த்துக் கிளம்பியது ஸ்டாலின் எனும் சிங்கக்குட்டி தந்தையைப்போல் சிறைக் கஞ்சி ருசி காண.

மாங்குயில் கூவிடும பூஞ்சோலை
எமை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை

என்ற வீர வரிகளைக் கருவிலேயே கேட்ட காளை அல்லவா?

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்
விசை ஒடிந்த தேகத்தில் வண்மை வேண்டும்
சூழ்ச்சிகளை வஞ்சகத்தை பொறாமை தன்னைத்

தூள்தூளாக்க சபதமேற்று இந்திராகாந்தியின் அவசர நிலையை எதிர்த்து நிற்க இளைஞர் பட்டாளத்துக்கு அழைப்பு விடுத்தது குற்றமா?

அண்ணாசாலையில் கலவரம் விளைவித்ததாக -பொய் குற்றசாட்டு அதானால் மிசா கைதி. சிங்கத்தைச் சிறையில் அடைத்து அதன் பிடரி மயிரைப் பிடுங்கி விட்டீர்களே அதற்கு இந்த வெண்தாடியைக் கேட்டாலும் கொடுத்து இருப்பேனே என்று வீர கர்ஜனை புரிந்த பெரியாரின் போர் மரவன் கலைஞர் ஆடாமல் அசையாமல் நின்று இருபத்திரெண்டு வயது இளைஞர் தளபதியை காவலர்கள் கைது செய்ய துணை நிற்கின்றார்.

மிசா அதுவும் ஒரு சட்டம்.

நாடு இன்று ஒரு சர்வாதிகாரியால் ஆளப்படுகின்றது. சட்டத்தின் முன் அனைவரும் சமம். அதைத்தான் மகனே மீறலாமா? மக்களாட்சி நெறிப்படி அமைந்த தன் அரசாங்கத்தை பறி கொடுத்ததோடு அல்லாமல் பறிந்த இந்திரா காந்தியையே, ஜனநாயக முறைக்கு திருப்பி நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சியைத் தருக!! என்று குறளோவியம் படைத்தவராயிற்றே அதோ

இந்நாடும் இன்மொழியும்
எம் அன்னை தந்தாள்
இயற்கையென்னும்
பெருந்தேவி எமக்களித்த செல்வம்
அன்னியர்கள் கொள்வாரோ
அடிமைகளோ நாங்கள்
ஆர்த்தெழுவோம் பழம்
பெருமை போர் முனையில்
காண்போம்



என்று சூழுரைத்த இளைஞர் பட்டாளம் தந்த தளபதியே கொடுமையான மிசா சட்டத்தில் கைது செய்து கொண்டு காவலர் ஊர்தி அந்தச் சிங்கத்தை சிறையில் அடைக்க ஓங்கார ஒலி செய்து கொண்டு புறப்படுகின்றது.

கோட்டை கொத்தளத்தில் முதல் முறையாக தேசியக் கொடியைப் பறக்க விட்ட கொற்றவன். ஜனநாயகப் போராளி ஸ்டாலினைக் கையசைத்து வழி அனுப்புகின்றனர். தயாளு அம்மையாரும் தங்க மருமகளும் ஆனந்த கண்ணீர் வடிக்கின்றனர்.

இந்த காட்சியை தமிழிசை கண்ட தேசிகர் உயிர்பெற்று வருவாரானால்

நீ ஜொலிக்குதடா - அவன்
நிற்கும் கிரிகையெல்லாம் என்று

புன்னாக வராளி பாடி இருப்பார். இந்த கொள்கை மறவனின் பிள்ளை தான் முன்னாள் சென்னை நகர மேயர் இன்று உள்ளாட்சித்துறை அமைச்சராகவும் பரினமிக்கின்றார். தியாக நெருப்பிலே தள்ளி சுடச்சுடரும் பொன்னாய் நாட்டுக்கு அளித்த மனுநீதி சோழன் கலைஞரை நற்றமிழ் வல்ல நாயகனை என் சொல்லி வாழ்த்துவேன் நான்.

பள்ளிப்பருவத்தில் திருக்குவளை விட்டு ஆரூர் பள்ளிக்கு தோழர்களுடன் கைகோர்த்து தந்தை சொல் மந்திரமாம் ஓம் நமச்சிவாய நமா என்ற ஒலியோடு சித்தமலம் நீக்கி கல்விபயின்று சிவமாகி நின்ற சித்தனை என் சொல்லி வாழ்த்துவேன் அதற்கும் தெய்வ சேக்கிழாரையே அழைப்போம்.

தண்ணாளி வெண்குடை வேந்தன்
செயல் கண்டு தரியாது
மண்ணவர்கன் மழை பொழிந்தோர்
வானவர் பூ மழை பொழிந் தார்
அண்ணலவன்கண் எதிரே
அணிவிதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான்
வீதிவிடங்கப் பெருமான்

-(சேக்கிழார் பெரியபுராணம்)

முடிவுரை

மனுநீதிசோழன் ஆட்சி மீண்டும் மலரட்டும்
மனுநீதி நாள்

இன்னாடும் இன்மொழியும்
எம்அன்னை தந்தாள்
இயற்கையெனும்
பெருந்தேவி எமக்களித்த செல்வம்
அன்னியர்கள் கொள்வாரோ
அடிமைகளோ நாங்கள்
ஆர்த்தெழுவோம் பழம்
பெருமை போர்முனையில்
காண்போம் என்று

போர்முரசு கொட்டி தேர்தல் போரிலே வென்று செம்மொழி கண்ட மனுநீதி சோழன் கலைஞரை ஆட்சி கொலுவிலே இனமான தமிழர்கள் அமர்த்தி விட்டார்கள்.

தமிழகமக்களுக்காக மாவட்டம் தோறும் மாவட்ட ஆட்சி தலைவர்கள் தலைமையில் மனுநீதி சோழன் நினைவாக அவர் அமைத்த மனுநீதி நாளை குரங்கு கை பூமாலையாக துயர் துடைப்பு நாளென்று மாற்றிவிட்டார்கள்.

ஆராய்ச்சி மணியடித்த மறுவிநாடியே பசுவுக்கு நீதி வழங்கிய மனுநீதி சோழன்போல் பதவியேற்ற மறுவிநாடியே பல அறிய திட்டங்களை வாயில்லா ஜீவன்களாகிய பாமரமக்களுக்கு வாரிவழங்கிய கருணை வள்ளல் கலைஞரை என் சொல்லி வாழ்த்துவேன்.

மாற்றுக்கருத்துடையோர் துயர்துடைப்பு நாள் என்று மாற்றியதை மீண்டும் மனுநீதி நாளாக அறிவிக்க வேண்டுகிறேன்.



அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தமிழர்பண்பாட்டுச் சின்னம்!

கண்ணகி உன்னை எங்கள்
கண்ணெதிர் நிலை நாட்டி விட்டோம்
- கலைஞர்



ஸ்ரீஜெயம் ஆப்செட் அச்சகம்,
மகாராஜபுரம் ரோடு, வத்ராப். Cell:9443854783.